# நான் அடைக்கலம் கோரி விண்ணப்பிக்க மந்திரி அனுமதிக்கும் வரை காத்திருக்கும் நேரத்தில் நான் என்ன செய்யலாம்?

நீங்கள் வள்ளத்தில் வந்திறங்கி இன்னமும் அடைக்கலம் வேண்டி விண்ணப்பிக்காத அடைக்கலம் நாடுபவரா? உங்கள் பதில் ஆம் என்றால், விண்ணப்பிக்க மந்திரி அனுமதிக்கும் வரை நீங்கள் செய்யக்கூடிய 6 காரியங்கள் உண்டு.

## 1. இன்றைய நாள் வரைக்குமான உங்கள் தொடர்புகளுக்கான விவரங்களை (விலாசம் மற்றும் தொலைபேசி எண்) நீங்கள் வைத்திருப்பதை உறுதி செய்யுங்கள்.

- அழையுங்கள் 1300 728 662
- அல்லது படிவம் 929ஐப் பூர்த்தி செய்யுங்கள்: கிடைக்கும் இணையத்தளம்: http://www.immi.gov.au/allforms/pdf/929.pdf
  - குறிப்பு: திணைக்களம் படிவம் கிடைக்கப்பெற்றதாக உறுதி செய்யாது.

## 2. உங்களது கோப்பின்(ஆவணங்கள்) ஒரு நகலைக் கோரி ஒரு தகவல் சுதந்திர விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.

- இங்கே தரப்பட்டுள்ள இணையத் தளத்தில், படிவம் 424A ஐப் பூர்த்தி செய்யவும்: http://www.immi.gov.au/allforms/pdf/424a.pdf
  - இது இலவசம்.
  - உங்கள் அடையாள நிரூபணம் படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் (உங்கள் குடிவரவு அட்டையாக இருக்கலாம்)
  - பின் வருவன உள்ளடங்கலாக, உங்கள் முழுமையான குடிவரவுக் கோப்பை(ஆவணங்கள்) கேளுங்கள்.
    - உள்ளகக் குறிப்புகள் மற்றும் கடிதங்கள்.
    - நேர்முகப் பதிவுகள் மற்றும் எழுத்துக் குறிப்புகள்.
    - உட் பரிசோதனை அல்லது வெளிப் பரிசோதனையின் பொழுது எடுக்கப்பட்ட முடிவுகளின் பதிவுகள்.
  - படிவத்தை நீங்கள் அஞ்சல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம் (foi.vic@immi.gov.au)
  - உங்கள் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள குறைந்தது ஒரு மாதமாவது ஆகும்.

## 3. நுழைவனுமதிப் பாதுகாப்பு விண்ணப்ப வரைவு ஒன்றைத் தயாரிக்கவும்

- நுழைவனுமதிப் பாதுகாப்பு விண்ணப்பப் படிவம் 866ஐப் பூர்த்தி செய்யவும், தரப்பட்டுள்ள இணையத்தளத்தில் படிவம் கிடைக்கப் பெறும்: http://www.immi.gov.au/allforms/pdf/866.pdf
  - ஒவ்வொரு கேள்விக்கும் பதிலிறுப்பது முக்கியமாகும். உங்களுக்குப் பதில் தெரியாவிட்டால், ‘எனக்குத் தெரியாது’ என எழுதவும்.
  - தகவல்கள் எதையும் ஊகிக்கக் கூடாது என்பது முக்கியமானது.
  - உங்கள் படிவத்தைச் சமர்ப்பிக்க முன்பு குடிவரவு சார்ந்த அறிவுரைகளைப் பெறுமாறு நாம் பரிந்துரை செய்கின்றோம்.

## 4. ‘கோரிக்கைகளின் அறிக்கை’ ஒன்றின் வரைவைத் தயாரிக்கவும்.

- ஒரு ‘கோரிக்கைகளின் அறிக்கை’ என்பது கையால் எழுதப்பட்ட, உங்கள் கதையும் நீங்கள் வீட்டிற்குத் திரும்பிப் போக முடியாமைக்குமான காரணங்களுமாகும்.
- RACS என்றழைக்கப்படும் உபயோகமான “தகவல் பக்கம்” தரப்பட்டுள்ள இணையத் தளத்தில் கிடைக்கும்: http://www.racs.org.au/factsheets/
- உங்கள் கோரிக்கைகளின் அறிக்கையைச் சமர்ப்பிக்க முன்பு குடிவரவு சார்ந்த அறிவுரைகளைப் பெறுமாறு நாம் பரிந்துரை செய்கின்றோம்.

## 5. உங்கள் கதையை ஆதரிக்கும் ஆவணங்களைச் சேகரிக்கவும்.

- உங்கள் கதையை ஆதரிக்கும் ஆவணங்களைச் சேகரிக்கும் பொழுது, முடியுமானால் அடையாள ஆவணங்களையும் சேர்த்துக் கொள்ளவும்.
- This might include:
- இதில் அடங்கக் கூடியன:
  - கடிதங்கள்.
  - நிழற் படங்கள்.

○ அங்கத்தவர் அட்டைகள்.
○ மருத்துவ மற்றும் ஆலோசனை அறிக்கைகள்.
○ உங்கள் கதையுடன் சம்பந்ப்படக்கூடிய சம்பவங்கள் பற்றிய செய்திக் கட்டுரைகள்.

- ஆவணங்கள் ஆங்கிலத்தில் இல்லாவிட்டால் அவை மொழி பெயர்க்கப்பட வேண்டும்.
- இரு மொழி பெயர்புச் சேவைகளாவன: VITS: http://www.vits.com.au/ and All Graduates Interpreting and Translating: http://www.allgraduates.com.au/
- உங்களுக்கு ஆதரவான ஆவணங்களைச் சமா்ப்பிக்க முன்பு குடிவரவு சாா்ந்த அறிவுரைகளைப் பெறுமாறு நாம் பரிந்துரை செய்கின்றோம்.

## 6. உங்களுக்கு உதவ ஒரு வழக்கறிஞரை ஒழுங்கு செய்வது சம்பந்தமாகச் சிந்தியுங்கள்.

- பொதுவாக அரச நிதியில் சட்ட உதவி (IAAAS) கிடைக்காது
- வயது வராதவா்கள் துணையின்றி வந்தால், சிலவேளை அரச நிதியில் சட்ட உதவி கிடைக்கலாம்.